26


# காந்தீயம்

விலை சதம் 10

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a ewspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

மலர் 9 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 102) 1971 டிஸம்பர் | இதழ் 3


# இயேசுகிறிஸ்து தலைசிறந்த சத்யாகிரகி

இயேசு கிறிஸ்துவின் பர்வதப்பிரசங்கத்திற்கும் பகவத் கீதைக்கும் எனக்கு வேற்றுமை தெரியவில்லை. 'பிரசங்கம்' கண்ணால் பார்ப்பது போல் வர்ணிப்பதை பகவத்கீதை சாத்திரீய சூத்திரமாகச் சுருக்கிக்கூறுகிறது. அது எல்லோரும் ஏற்கக்கூடிய ஒரு சாத்திர நூலில் இல்லாதிருக்கலாம். ஆனால் அன்பின் நியமத்தை, சட்டத்தை- நான் தியாக நியமம் என்று கூறுவதை -சாத்திரீய முறையில் விவாதித்து விளக்குகிறது. அதிலும் முக்கியமாய் ஒன்றைக் குறிப்பிடுகின்றேன். 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன் வலக்கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்காட்டு. உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றிருப்பவனுக்கு உன் அங்கியையும்விட்டுவிடு, என்ற பாசுரங்கள் எனக்கு அளவில்லாத இன்பமளித்தது. பர்வதப் பிரசங்கமோ அதே நியமத்தை அற்புதமான சொற்களில் விவரித் திருக்கிறது.

என் கருத்துப்படி இயேசு ஒரு சிறந்த கலைஞராவர். ஏனெனில் அவர் உண்மையைக் கண்டு வெளியிட்டார். இவர் உண்மையையே முக்கியமாய் நாடியமையால், இவரது படைப்புக்கள் இயல்பாகவே அழகுறஅமைந்தன.

உலகிலுள்ள பல்வேறு சமயங்களுக்குமே பொதுவான சில கொள்கைகள் இருக்கின்றன. அதுவே மனிதனது வாழ்க்கையை உயர்த்தி, அதற்கு ஒரு இலட்சியத்தை அளிப்பதாகும். தான் குறிப்பிட்ட தெய்வீகஅம்சமும் பொருளும் இயேசுவின் வாழ்க்கைக்கு உண்டாகையால் நான் அவரை கிறிஸ்துவ சமயத்திற்கு மட்டுமல்லாது அகில உலகிற்கும், எல்லா சாதிகளுக்கும், மக்கள் இனங்களுக்கும்- அவர்கள் எந்த நாட்டில், எந்த அரங்கில் இருந்து, எந்தக் கொள்கைகளை ஏற்றிருந்தாலும் எந்த சமயத்தைப் பின்பற்றினாலும், தம் முன்னோரிடமிருந்து பெற்ற எந்தக் கடவுள் வழிபாட்டைச்செய்து வந்தாலும் உரியவரென்று நம்புகின்றேன்.

புத்தர் அஞ்சாது பகைவர்களிடையே போய் திமிர் பிடித்த புரோகிதர்களை வணங்கச் செய்தார். இயேசு எருசலேமின் கோயிலிலிருந்து காசுக்காரர்களை விரட்டியடித்து மாயக்காரர்களுக்கும் பரலோகத்தின் சாபத்தை வாங்கிக் கொடுத்தார். இவர்கள் இருவருமே தீவிரமான நேரிடை நடவடிக்கைகளில் நம்பிக்கையுள்ளவர்கள். ஆனால் புத்தரும் சரி, இயேசுவும் சரி, தீயாரைக் கண்டித்த பொழுதே ஒவ்வொரு செயலையும் மிகவும் அன்பாகவும், ஆதரவுடனுமேயே செய்தனர். அவர்கள் தம் எதிரிகள் "மீது தம் விரலையும் போட விரும்பவில்லை; ஆனால் அதேசமயத்தில் தம்மையே பலியிட்டார்களே தவிர, எந்த உண்மைக்காக அவர்கள் வாழ்ந்தார்களோ அதைச் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. இயேசுவோ ஒரு ஏகாதிபத்தையே எதிர்த்து தலையில் முள் முடியுடன் உயிர் நீத்தார்.

மனிதகுலம் இதுவரை பெற்றுள்ள மாபெரும் போதகர்களுள் இயேசுவும் ஒருவர் என்பது என் எண்ணம். இயேசு கடவுளின் அண்மையிலிருந்ததற்கு அவரது வாழ்க்கையிலே போதிய ஆதாரம் இருப்பதாய் நான் கருதுகிறேன். அதாவது,கடவுள்தத்துவத்தையும், கடவுள் உள்ளத்தையும் வேறுஎவரும் இயன்றிராத அளவுக்கு அவர் வெளியிட்டார். இந்தவகையிலேயேதான் அவரைகடவுளின் திருமகனென்று கருதவும்ஏற்கவும் செய்கிறேன். ஆனால் இயேசுவிடம் அதன் முழு உருவிலும், மாந்தர் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய வகையிலும் காணப்பட்ட அந்த தெய்வ அம்சம் இப்போது இருக்கிறதென்பது என் நம்பிக்கை.

மகாத்மா காந்தி

## அன்பர்களுக்கு .........

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

காந்தி சேவா சங்கம் 1972 ஆம் ஆண்டில் மேற்கொள்ள விருக்கும் ஆக்க பூர்வமான நிர்மாணப் பணிகளின்விபரம்:

- கிளிநொச்சி- அக்கராயன் குளத்தில் அமைக்கப் பட்டுவரும் காந்திக் கிராமத்தில், இப்போது பண்படுத்தப் பட்டுள்ள 50 ஏக்கருடன், மேலும் 50ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தி உற்பத்தியை பெருக்குதல்,
- பரந்தன்- தர்மபுரம், கஸ்தூரிபாய் காந்தி நிலையத்தில் பெண்களுக்குரிய பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்தல்,
- இரத்மலானை- சர்வோதய நிகேதனத்தில் அம்பர் ராட்டைப் பயிற்சியைத்தொடங்குதல்.

இப்பணிகளைச்சிறப்புற நிறைவேற்றுவதற்கு காந்தி சேவா சங்கம் அனைவரினதும் ஆதரவை அன்புடன் வேண்டுகிறது.

# காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 102
1971 டிஸம்பர்


## பகுத்துண்ணல்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை

தாம் உண்பதனை பசித்த உயிர்கட்குப் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்ணுதல் வேண்டும். அற நூல்கள் எழுதியவர்கள் துறவறத்தாருக்கு விதித்த விதிகளுள் இது முக்கியமான ஒன்று. இக்குறள் துறவறத்திற் குரிய பகுதியில் வருவதால் துறவறத்தார்க்கு மட்டும் உரியதென்று கொள்ளக் கூடாது. இக்குறளுக்கு உரை எழுதிய மணக்குடவர் இதற்கு வருமாறு உரை கூறுவர். பல்லுயிர்களுக்குப் பகுத்து அளித்து அவற்றைப் பாதுகாத்தல் அறங்கள் எல்லாவற்றினும் தலையான அறம்''.

இக்குறள் துறவறவியலில் கொல்லாமை என்னும் அதிகாரத்தில் இரண்டாவது குறள். இதில் இரண்டு அமிசங்களை நாம் நோக்க வேண்டும். இவ்வதிகாரத்தில் முதலாவது குறள் வருமாறு:

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

இதன் பொருள், அறச்செய்கை எது என்று கேட்டால், ஓர் உயிரையும் கொல்லாமை என்பது ஆகும். கொல்லுதல் என்பதோ மற்றை எல்லாப் பாவங்களையும் செய்ததற்குச் சமனாகும் என்பதாம். இந்தக் குறளை நோக்குமிடத்து கொல்லாமை என்பது மற்றை எல்லா அறங்களின் பயன்களையும் தரும் என்பது புலப்படும். இங்கு வள்ளுவர் கொலை என்பது என்னவென்று தெளிவாகக்கூறவில்லை. பொதுவில் மிகக்கொடிய இன்செயலை அவர் குறிக்கின்றார் என்று நாம் கொள்ளலாம். இதற்கு அடுத்த குறள் தான் இக்கட்டுரையின் முதன் முதலாக எடுத்துக்காட்டப் பெற்றகுறள்.

இவ்விரண்டு குறள்களையும் அடுத்தடுத்து வைத்து நோக்கும் போது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் தலையாய அறம் என்பதும், அதுவே கொல்லாமை என்று சொல்லப்படுகின்ற தொகுதி அறங்களுள் முக்கிய மானது என்பதும் புலப்படும். இது உடன்பாட்டு முறையில் நோக்கும் போது, மற்றையவர் பசித்திருக்க, அவருடன் பகுத்துண்ணாது தாம் தனியே உண்ணல் கொலைக்குச் சமன் என்பது பெறப்படும். இந்தக் கருத்து வள்ளுவர் நெஞ்சில் ஆணித்தரமாகப் பதிந்திருந்தது என்பதற்குத் தடையில்லை. அறச்செயல்களுள் தலையாயது பகுத்துண்ணல் என்கிறார். அதேவேளையில் கொல்லாமையே ஒரு தனி அறம் என்கிறார். எனவே அயலில் பசி இருக்கும் வரை பகுத்துண்ணத் தவறல் கொலை என்பது இலகுவில் புலப்படும்.

இதுவரை கூறியது இக்குறள்களின் பொருளிலிருந்து எழும் முதலாவது அமிசம், இரண்டாவது அமிசம் வருமாறு,

துறவறத்தார் மற்றையவர் பசியைப்பற்றி ஏன் கவலைப்படுவான்? அவர் தம் மோட்சம் ஒன்றையே கருதித் தவம் செய்யலாமே! அயலார் பசி இருக்க ஒருவர் தாம் தனியே தவம் இருக்க முடியாது. தவம் உடையான் அருளுடையான். மற்றையவர் துன்பம் கண்டு சும்மா இருப்பவன் அருளுடையவனா? எனவே துறவற நிலையில் இருப்பது என்பது கண்மூடி மௌனியாகத் தனியே இருப்பது என்ற பொருளன்று. துறவறத்திற்குரிய முக்கிய பணிகளுள் தம்மைச் சூழ்ந்தவரின் பசியை நீக்குதல் ஒன்று என்பது இதிலிருந்து புலப்படும். துறவறம்இங்கே சமூகத்தொண்டினின்றும் வேறுபடாதது என்பது நமக்குப் புலனாகும். துறவு பூண்டு தனி ஒருவரின் ஆன்ம ஈடேற்றத்தை மட்டும் கருதி உழைப்பது பசிப்பிணி நிறைந்த உலகில் அறமாகாது என்பது வள்ளுவர் கருத்து.

எனவே பகுத்துண்ணல் என்பதோடு பகுத்து நுகர்தலும் ஒரு கட்டாயமான அறமாகிறது. உணவு மட்டுமன்றி உடை, உறையுள் யாவும்பகுத்து நுகர்தல் அறங்களுள் சிறந்த அறமாகின்றது. தன்னையும் ஒறுக்காது தம்மில் குறைந் தாரையும் ஒறுக்காது வாழ்வதே சிறந்த சமூகத்தொண்டு; சிறந்த அறம். தனி மனிதன் தானாக இதைச் செய்யாத விடத்து அரசு தலையிட்டு அவனைக் கட்டாய மாகச் செய்ய வைக்கிறது. தான் உணர்ந்து செய்வது சர்வோதயம்.மற்றையதுதான் அரசுச் சமதர்மம்.

—இ.இ

## வாலிபர்களுக்கு அழைப்பு

(ஸ்ரீ தீரேந்திர மஜும் தார்)

இன்று கிராமத்து இளைஞர்கள், பட்டணத்துப் பணக்காரர்களால் தயார் செய்யப்பட்டதும் அவர்களைப் போல்வதுமான உடைகளை அணிகிறார்கள். உணவு, பானம், பேச்சு பழக்கம் வீடுவாசல், மற்றும் சகலமுறைகளிலும் அவர்களையேபின்பற்றுகிறார்கள்.வாழ்க்கையில் ஆசையும், எண்ணமும் அவர்களது பழக்கவழக்கங்களைப் பின்பற்றும் பாதையிலேயே செல்கின்றன. இத்துடன் அவர்கள் சுரண்டுவதால் ஏற்படும் கஷ்டங்களுக்காக அவர்களைத் திட்டுவதும் இருக்கிறது. ஆனால், இம்மாதிரி வசை புராணம் படிப்பதால் உங்கள் சுயராச்சியம் பட்டணத்துக் கோடீசுவரர்களிடமிருந்து உங்கள் குடிசைப் பக்கம் இம்மியளவும் நகராது என்பதை நன்கு அறியவேண்டும். வாலிபர்கள் பள்ளி-கலாசாலைகளை விட்டு, கோடுகச்சேரிகளை விட்டு, இன்றைய சட்டசபையின் ஆசையை மந்திரி சபையின் ஆசையைவிட்டு, உயிரைக் கையிலேந்தி வாழ்வைத்தியாகம் செய்து இயக்கம் நடாத்தினால் தான் கிராமக் குடிசைகளுக்கு சுயராஜ்யம் வரும். இதற்காக நீங்கள் ஒடுங்கவும் இறந் -தொழியவும் சித்தமாக வேண்டும். ஏனெனில், உங்களை ஒடுக்கவும், அடக்கவும், கொடுமைப் படுத்தவும் இந்த சுதேசி, முதலாளித்துவ உத்தியோகத்தர் ஆட்சிச்சக்திகள் வெளிநாட்டாரைவிட ஆயிரம்மடங்கு எதிர்த்து நிற்கும்.

ஆதாரம்; கதர் மலர்.

# வன்னித்தம்பி நினைவு விழா

அமைதியற்றிருக்கும் உலகிற்கு ஆறுதலளிக்கவல்ல சர்வோதய இலட்சியத்தைத் தமது வாழ் நாளில் கடைப் பிடித்துபொதுத் தொண்டில் ஈடுபட்ட திரு. சி. வன்னித்தம்பி அவர்களின் மறைவுநாட்டிற்கும் சிறப்பாக சர்வோதய இயக்கத்திற்கும் பெரும் இழப்பாகும் என அகில இலங்கைக்காந்திசேவா சங்கத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் இரத்மலானை இந்துக்கல்லூரிச்சதுக்கத்தில்அமைந்துள்ள சர்வோதய நிகேதனத்தில் நடைபெற்ற வன்னித்தம்பி நினைவு விழாவின்போது அன்னாரதுபடத்தை தத்திரை நீக்கம் செய்து பேசுகையில்கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது,போதிய தொண்டர்கள் இல்லாமையால் சமூகத்தில் எத்தனையோ பணிகள் நிறைவேற்றப்படாதிருக்கின்றன. இநிலையில், திரு. வன்னித் தம்பி அவர்களின் தொண்டுகள் மூலம் பல பொதுப்பணிகள் நடைபெற்றன. அவரது மறைவினால், அவர்மேற்கொண்ட பணிகள் தடைப்படாதிருக்க நம் எல்லோரும் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும். இதுவே நாம் அவருக்குச் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

மேற்படி விழாவிற்கு சுகாதாரத் திணைக்கள உதவி அதிபர் டாக்டர் ஜே. வி. அருளானந்தம் அவர்கள் தலைமை தாங்கினார்.

திருவாளர். பி. கதிரவேலு, சி. யோ. தேவதாஸ், திருமதி. சரஸ்வதி தம்பிப் பிள்ளை, ஆகியோர் உரையாற்றினார்கள்

விழாமுடிவில் அன்னதானம் நடைபெற்றது.

5, 12. 71இல் நடைபெற்ற திரு. சி. வன்னித்தம்பி நினைவு தின விழா வரவு-செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| திரு. கே. தர்மராஜா | 100 | 00 |
| திரு. பி. சங்கரபாண்டியன் | 50 | 00 |
| டாக்டர்.ஆர்.பி. இராஜகோன் | 50 | 00 |
| ,, ஜே. வி. அருளானந்தம் | 50 | 00 |
| ,, சி.எச் முணசிங்க | 10 | 00 |
| திரு. பி. கதிரவேலு | 15 | 00 |
| திரு, இ.இரத்தினம் | 10 | 00 |
| திரு. சோ. க. தம்பிப்பிள்ளை | 10 | 00 |
| திரு. வி. கணபதிப்பிள்ளை | 10 | 00 |
| திரு. கே. அப்புத்துரை | 10 | 00 |
| திரு, எஸ். இராமநாதன் | 10 | 00 |
| திரு. ரி. முருகையா | 10 | 00 |
| திரு. கே. ஏ. தங்கையா | 5 | 00 |
| திரு. சி. நல்லையா | 10 | 00 |
| திரு. பி. திருச்சிற்றம்பலம் | 5 | 00 |
| திரு. பி. ஜீ. ஜயரத்தினம் | 10 | 00 |
| திரு. ந. ஞானசம்பந்தன் | 10 | 00 |
| திரு. எஸ். அருமைத்துரை | 10 | 0 |
| திரு. எஸ்..கணேசரத்தினம் | 10 | 00 |
| திரு. எஸ். சண்முகநாதன் | 10 | 00 |
| திரு எஸ். நேசரத்தினம் | 10 | 00 |
| திரு. என். நமசிவாயம் | 10 | 00 |
| திரு. பி. எஸ்.ஜயசிங்க | 5 | 00 |
| திரு.என். அரியரத்தினம் | 2 | 00 |
| திரு. சு. கந்தையா | 5 | 00 |
| மொத்தம் | 437 | 00 |

| செலவு | | |
|---|---|---|
| படம் | 65 | 50 |
| அன்னதானம் | 150 | 10 |
| அச்சுக்கூலி | 15 | 00 |
| தபால் | 9 | 60 |
| நாளுவிதம் | 3 | 25 |
| கையிருப்பு | 193 | 55 |
| மொத்தம் | 437 | 00 |

# நான் இறந்த தமாஷ்

ஆசார்ய வினோபா

அன்று வார்தாவில் நான் இறந்து விட்டதாக தவறான செய்தி பரவிவிட்டது. போன் மூலம் பலர் துக்கத்துடன் கேட்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்தத் தவறான வதந்திக்குக் காரணம் பிறகு தான் தெரியவந்தது.

அன்று வழக்கம் போல் சகோதரிகளுடன்பிரார்த்தனையில்கலந்துகொண்டேன். மத்தியில் கொஞ்சம் களைப்பு தோன்றியது. சிரமபரிகாரமாக 'சவாசனம்'' நிலையில் படுத்துக் கொண்டேன். யாரோ சைக்கிளில் போய்க் கொண்டிருந்தவர், நான் கீழேபடுத்துக் கிடந்ததையும் சுற்றிலும் சகோதரிகள் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதையும் பார்த்தார். சரீ நான் இறந்து விட்டேன் அல்லது மரணத்தறுவாயில்இருக்கிறேன் என்று எண்ணினார். இதை அவசரஅவசரமாக வார்தாவில் சொல்லிக் கொண்டே போனார். இதிலிருந்து ஏற்பட்ட தவறான வதந்தி என்று தெரியவந்தது.

ஆதாரம்; சர்வோதயம்

# சம்பத்துத்தானம்

இரத்மலானைசர்வோதயநிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

| | | |
|---|---|---|
| திரு. எஸ்.ஆர். ஆனந்தன்<br>36ஆவதுஒழுங்கை<br>வெள்ளவத்தை | 2 | 00 |
| செல்வி லோகினி செல்லத்துரை<br>திருக்குடும்ப கன்னியர்மடம்<br>பம்பலப்பிட்டி | 5 | 00 |
| திரு, சு, நாகலிங்கம்<br>கட்டிட திணைக்களம்<br>கொழும்பு | 10 | 00 |
| திருமதி. ஈ. ஆர். செல்லத்துரை<br>கொழும்பு-11 | 5 | 00 |
| செல்வன். சஞ்சீவன்-சிவலிங்கம்<br>7, விவேகானந்த அவென்யூ<br>வெள்ளளத்தை | 5 | 00 |

# காந்திநிலையத்தில் பலாலி ஆசிரிய பயிற்சி மாணவர்

தொழில்மூலம் கல்வி பெறுவதே சிறந்த கல்வியெனக்கண்ட காந்தியடிகள் வார்தாக்கல்வித் திட்டத்தை உருவாக்கினார். இக்கல்வித்திட்டம் வாழ்விற்கு ஆதாரமாக அமைவதால் ஆதாரக்கல்வி என அழைக்கப்படுகிறது என உருத்திரபுரம் காந்தி நிலையத்திற்கு வருகை தந்த பலாலி- அரசினர் ஆசிரியகலாசாலையைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் கருத்துரை வழங்குகையில் காந்திசேவாசங்கா உப தலைவர் திரு. இ. கந்தைய கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, இன்றைய பிரச்சனைகளுக்குத்தீர்வு காண தொழிற்கல்வியே சிறந்தவழியெனப் பேசிககொள்ளப் படுகிறது. ஆனல், ஆதாரக்கல்வி முறையின் முக்கியத்துவத்தை மக்கள் உணர மேலும் சில ஆண்டுகள் செல்லும். எனினும் தற்போதைய கல்விபுனரமைப்பில் ஆதாரக்கல்வியின் சிலஅம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

கருத்தரங்கம் ஆரம்பமாவதற்கு முன் காந்திசேவாசங்க பொதுச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை காந்திசேவாசங்க-சர்வோதயத் திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார்.

கருத்தரங்க முடிவில் அம்பர் ராட்டை இயக்கிக் காண்பிக்கப் பட்டது.

## வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [1971 நவம்பர்] வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 32 | 64 |
| சர்வோதயபாத்திரம் | 7 | 81 |
| சம்பத்துத்தானம் | 12 | 00 |
| அரிசி | 48 | 10 |
| விடுதிக்கட்டணம் | 60 | 00 |
| காந்தியம் | 5 | 00 |
| மொத்தம் | 165 | 55 |
| செலவு | | |
| உணவு | 47 | 16 |
| பிரயாணம் | 21 | 10 |
| தபால் | 7 | 30 |
| சலூன் சலவை | 3 | 50 |
| மாணவர்செலவு | 8 | 23 |
| கோகுலம் | 2 | 80 |
| வெளிச்சம் | 32 | 10 |
| வயித்தியம் | 2 | 36 |
| நாளுவிதம் | 2 | 00 |
| காந்தியம் | 27 | 00 |
| கையிருப்பு | 9 | 00 |
| மொத்தம் | 165 | 55 |

## செய்திகள்

யாழ். மாவட்டத்தில், மரவரி முறையை நீக்கி தவறணை முறையை எவ்வாறு அமுல்நடத்த வேண்டு மென ளக்கி நிதி அமைச்சர், மாண்புமிகுகலாநிதி என். எம். பெரேரா அவர்கட்கு காந்தி சேவாசங்கம் மகஜர் அனுப்பியுள்ளது. இதன் விபரம் அடுத்த 'காந்தீயம்' பத்திரிகையில் வெளிவரும்.

★ ● ★

இரத்மலானை- சர்வோதய நிகேதனத்தில் பால் பண்ணையை ஆரம்பித்து இளைஞர்கட்கு பயிற்சி அளிப்பதற்கான திட்டத்திற்கு ஆதரவு தருவதாக தெகிவளையைச் சேர்ந்த திரு. பி. சங்கரபாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சர்வோதய பாத்திர இயக்கம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க ஆதரவில் தொடங்கப்பட்டுள்ள சர்வோதயபாத்திரஇயக்கச் செய்திகள்

- பம்பலப்பிட்டி, இந்துக்கல்லூரியிலிருந்து 62 கொத்து அரிசியும் 1 ரூபா 60 சதமும்,
- தெகிவளை, அரசினர் தமிழ்ப் பாடசாலையிலிருந்து 14 கொத்து அரிசியும்,
- கொட்டாஞ்சேனை, தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து 22 கொத்து அரிசியும்,
- கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த கணபதி வித்தியாலயத்திலிருந்து 25 கொத்து அரிசியும்,
- கொழும்புப் பகுதிகளிலுள்ள 64 வீடுகளிலிருந்து 71கொத்து அரிசியும் 6 ரூபா 85 சதமும் கிடைத்துள்ளன.

## காந்திக் கிராமம் தர்மகர்த்தா சபை

காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்தமாக கிளிநொச்சி - அக்கரயான்குளத்தில் நிறுவப்பட்டுள்ள காந்திக் கிராமத்தின் தர்மகத்தாசபைஉறுப்பினர்விபரம்

1. முதலியார். செ. சின்னத்தம்பி வட்டுக்கோட்டை
2. வயித்திய கலாநிதி வ. த. பசுபதி ,யாழ்ப்பாணம்
3. திரு இ. கந்தையா, கொக்குவில்
4. திரு.இ. வேலாயுதர், கைதடி
5. திரு. கே.ஸி. தங்கராசா கொழும்பு—4
6. திரு. சோ. க. தம்பிப்பிள்ளை கொழும்பு—6
7. திரு. சி. க. வேலாயுதபிள்ளை உருத்திரபுரம்

1972 ஜனவரி 30 இல் வரும் காந்தியடிகளின் மறைவுதினத்தையொட்டி சர்வோதய நிர்மாணப் பணிகளைச் செயல்படுத்தகாந்தி சேவாசங்கம்திட்டமிட்டுள்ளது.

இளைஞர்களே!

உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன் ?

★ கமம்
★ நெசவு
★ தும்பு
★ அச்சு
★ தையல்
★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு

காந்திநிலையம் : உருத்திரபுரம்
அல்லது
சர்வோதயநிகேதனம்
212, 10 ஆவது குறுக்குத் தெரு
இந்துக்கல்லூரிச்சதுக்கம்
இரத்மலானை.

## விநோபா கூறுகின்றார்

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சர்வோதயபாத்திரம் இருக்கட்டும். அந்த வீட்டிலுள்ளகுழந்தைகள் தாங்கள் உண்ணுவதற்கு முன்பு அதில் ஒரு பிடி தானியம் போடவேண்டும். பெரியவர்கள் போடுவது அதிகமாக இருக்குமானாலும் குழந்தைகளே போடவேண்டும். நமக்குக் குழந்தைகளின் கைப்பிடி தானியமே போதும். அப்போது 'நாம் சமுதாயத்திற்கு ஒன்றும் கொடுக்காமல் உண்ணுவது பிழை' என்பதைக் குழந்தைகள் இதனால் அறிந்து கொள்வார்கள். இந்தச் சர்வோதய பாத்திரத்தால் யாருக்கும் எந்த முடையும் ஏற்பட்டுவிடாது. இதை எளியவர்களின் வீட்டிலும் வைக்கவேண்டும்.

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்திசேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில்அச்சிடப்பட்டது.